29.01.2026 OS.No.116/2022 DW2 Name :.சிராஜ்

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதி என்னுடைய மனைவி. அவருக்கு வாணியம்பாடி ஸ்டேட் பேங்க் வங்கியில் கணக்கு உள்ளது. வாணியம்பாடியில் வேறு வங்கியில் அவருக்கு வங்கி கணக்கு இல்லை. எப்போதும் இருந்தது இல்லை. எனக்கு வாணியம்பாடி கரூர் வைசியா வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. சிண்டிகேட் வங்கி கணக்கு என் மனைவி பெயரில் இல்லை என்பதை அந்த வங்கி மூலமாக விவரம் கேட்டு தெரிந்துக்கொண்டேன். என் மனைவி பெயரில் வாணியம்பாடி கனரா வங்கியில் வங்கி கணக்கு எதுவும் இல்லை.
2. சிண்டிகேட் வங்கி என்பது கனரா வங்கியுடன் இணைந்துள்ளது என்பது தெரியும். வாணியம்பாடி இந்தியன் வங்கியில் என் மனைவிக்கு வங்கி கணக்கு இல்லை அதை வங்கி மூலம் உறுதிபடுத்திகொண்டேன். எனக்கு வாணியம்பாடி இந்தியன் வங்கியில் வங்கி கணக்கு இல்லை. வா.சா.ஆ.5 ஆவணம் தவறானது ஆகும். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்களில் உள்ள வங்கி கணக்குகள் என் மனைவி பெயரில் இல்லை. அந்த விவரத்தை சம்மந்தபட்ட வங்கி மூலம் நான் கேட்டு தெரிந்துகொண்டேன்.
3. வா.சா.ஆ 7 ஆவணத்தில் உள்ள முகவரி என் மனைவியுடையது தான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் என் மனைவி கையெழுத்து இல்லை. நீதிமன்றத்தில் உள்ள வக்காலத்தில் என் மனைவி கையெழுத்து இல்லை. வா.சா.ஆ. 8 ஆவணத்தில் என் மனைவி

கையெழுத்து இல்லை. வா.சா.ஆ. 6 ஆவணத்தில் முதலாவது சாட்சியாக உள்ள இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது.

4. முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. வா.சா.ஆ. 6 ஆவணத்தில் உள்ள கையெழுத்தை தற்போது வழக்கிற்காக மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 2வதாக சாட்சி கையெழுத்திட்டுள்ள ஜெயசாம்ராஜ் என்பவர் எனக்கு தெரியாது. அவர் என் அண்ணனின் நண்பர் ஆவார். அவரை நாங்கள் விசாரிக்கவில்லை. ஏன் விசாரிக்கவில்லை என்றால் அவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளது தெரியாது என்பதால் விசாரிக்கவில்லை.

5. வா.சா.ஆ.6 ஆவணத்தை நீதிமன்றம் மூலம் நான் பார்வையிட நான் நடவடிக்கை எடுக்கவில்லை. எனக்கும் சாட்சிகளுக்கும் விரோதம் இல்லை. என் சகோதரரை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. வழக்கில் கூறியுள்ளபடி நானும் என் மனைவியும் வாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு தற்போது அதை மறுத்து பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 ஆவணத்தை தற்போது வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

6. வழக்கிற்காக என் மனைவியின் கையெழுத்தை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அவற்றை மறுப்பதற்காக நான் வழக்கு ஆவணங்களில் நான் மாற்றி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் கொடுக்கவில்லை என்றால் அது என் மனைவிக்கு தான் தெரியும். வழக்கு பற்றிய விவரம் எனக்கும் தெரியும். பதில் கொடுப்பது தொடர்பாக என்

மனைவிக்கு அறிவுரை எதுவும் கூறவில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 29/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.29 17:04:42 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.